සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## இஸ்லாம் - ඉස්ලාම්

தரம் : **8** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) அகீதாவின் பிரிவுகளில் உள்ளடங்காதது,
   1) தௌஹீத் 2) றிஸாலத் 3) ஹிதாயத் 4) மஆத்

2) இஹ்லாஸ் என்பதன் கருத்து,
   1) நம்பிக்கை 2) பேணுதல் 3) உளத்தூய்மை 4) இறையச்சம்

3) நோன்பு கடமையாக்கப்பட்ட ஆண்டு
   1) ஹிஜ்ரி 1 2) ஹிஜ்ரி 2 3) ஹிஜ்ரி 3 4) ஹிஜ்ரி 4

4) ஸகாத் எனும் சொல்லின் கருத்ததாக அமையாதது,
   1) அபிவிருத்தி 2) தூய்மை 3) நேர்மை 4) வளர்ச்சி

5) சுத்தம் ஈமானின் பாதி என்பது,
   1) அல்குர்ஆன் 2) ஹதீஸ்
   3) ஸஹாபாக்கள் கூற்று 4) பழமொழியாகும்

6) ஸமூத் கூட்டத்தினர் எந்தநபியின் உம்மத்தினராவர்,
   1) நூஹ் (அலை) 2) ஸாலிஹ் (அலை)
   3) இப்றாஹீம் (அலை) 4) ஈஸா (அலை)

7) பிரார்த்தனை மு.்.மினின் ஆயுதமாகும் என்பது,
   1) அல்குர்ஆன் 2) ஹதீஸ்
   3) ஸஹாபாக்கள் கூற்று 4) பழமொழியாகும்

8) ஜாஹிலிய்யாக்கால மக்கள் முஹம்மத் நபி (ஸல்) அவர்களை அழைத்தசிறப்புப் பெயர்களில் ஒன்று,
   1) அபுல் பஷர் 2) அல் அமீன் 3) மஸீஹுல்லாஹ் 4) தபீஹுல்லாஹ்

9) திலாவதுல் குர்ஆன் என்பதன் மூல் கருதப்படுவது,
   1) அல்குர்ஆனைசுமத்தல் 2) அல்குர்ஆனைதொடுதல்
   3) அல்குர்ஆனைஓதுதல் 4) அல்குர்ஆனைபார்த்தல்

10) சூறாஅல்மாஊன் என்பதன் கருத்துயாது?
   1) நற்குணங்கள் 2) முற்பகல் 3) அதிகாலை 4) அற்பப்பொருட்கள்

11) இ∴திகாப் என்பதன் மூலம் கருதப்படுவது,
   1) இரவுநேரதொழுகை
   2) பள்ளிவாயலில் தரித்திருத்தல்
   3) அல்குர்ஆன் ஓதுதல்
   4) இறையச்சம்

12) உலுல் அஸ்ம்களில் உள்ளடங்காத நபி,
   1) தாவூத் (அலை)  2) மூஸா (அலை)  3) ஈஸா (அலை)  4) இப்றாஹிம் (அலை)

13) அல்குர்ஆனில் மொத்தமாக ஸஜ்தாவுடைய ஆயத்துக்கள் வந்துள்ள சந்தர்ப்பங்கள்
   1) 45  2) 35  3) 25  4) 15

14) ஸலாதுல் குஸுபைன் எனப்படும் தொழுகை
   1) இரு பெருநாள் தொழுகை
   2) இரு கிரகணத்தொழுகை
   3) மழைத் வேண்டித் தொழும் தொழுகை
   4) லநவ நாடித் தொழும் தொழுகை

15) பர்ளான தொழுகைக்கு உதாரணமாக அமையாதது,
   1) ஜனாஸாத் தொழுகை
   2) நேர்ச்கைத் தொழுகை
   3) பெருநாள் தொழுகை
   4) தராவீஹ் தொழுகை

♦ **இடைவெளி நிரப்புக.**

16) மறுமையில் விசாரணையின் போது அவனது………………………….. சாட்சியாகவரும்.

17) பிரயாணத்தின் போது……………………………. தொழுகைமுறை அனுமதிக்கப்பட்டுள்ளது.

18) அல்குர்ஆனை ஓதுவதன் மூலம் ……………………………அடையலாம்.

19) ஹதீஸ் நபவீயானது கல்வி, பிஅலீ……………………….. என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

20) வெள்ளிக்கிழமையன்று……………………………………ஓதுவது சுன்னத்தாகும்.

(ஸகீனத், ஜம்உஸ்கஸ்று, தக்ரீரி, சூறா கஹ்ப், குத்ஸி, உடல் உறுப்புக்கள், கழாத்தொழுகை)

♦ **சரி, பிழை கூறுக.**

21) சூறாமாஊன்அல்குர்ஆனில் 109ஆவது அத்தியமாகும். (…….)

22) வஹிமத்லுவ் என்பதுஅல்குர்ஆனாகும். (…….)

23) அறிவுதேடிப்புறப்பட்டோர் அல்லாஹ்வின் பாதையில் பயணிப்பவராவார்கள். (…….)

24) அல்குர்ஆன் தொழுகையோடு இணைந்து குறிப்பிடும் கடமை நோன்பாகும். (…….)

25) ஸதகா எனும் செயல் வாஜிபான நல்லமலாகும். (…….)

(50 புள்ளிகள்)

## பகுதி II

- எவையேனும்ஐந்துவினாக்களுக்குவிடைதருக.

1. 1) றமழான் மாதம், இஸ்லாமியமாதங்களின் எத்தனையாவதுமாதமாகும்? (2 புள்ளிகள்)
   2) நோன்புவிதியாவதற்குரியநிபந்தனைகள் 03 தருக. (3 புள்ளிகள்)
   3) றமழான் மாதம் நாம் நிறைவேற்றவேண்டியசெயற்பாடுகள் 5 தருக. (5 புள்ளிகள்)

2. 1) ஸகாத்,ஸதகாஎனும் பதங்களின் கருத்துக்களை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   2) ஸகாத்,ஸதா இரண்டுக்குமிடையிலான வேறுபாடுகள் 3 தருக. (3 புள்ளிகள்)
   3) உரியமுறையில் ஸகாத்தை நிறைவேற்றுவதனால் கிடைக்கும் நன்மைகள் 5 தருக. (5 புள்ளிகள்)

3. 1) ‘உலமா”எனப்படுவோர் யார்? (2 புள்ளிகள்)
   2) ஆலிம்களின் சிறப்புப் பற்றிகுறிப்பிடப்படும் ஹதீஸ் ஒன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   3) ஆலிம்களின் கண்ணியப்படுத்த நாம் செய்யவேண்டிய செயல்கள் 5 தருக.(5 புள்ளிகள்)

4. 1) அஹ்லாக் என்பதன் கருத்துயாது? (2 புள்ளிகள்)
   2) எமதுவாழ்வில் கடைபிடிக்கவேண்டிய பண்புகள் 03 தருக. (3 புள்ளிகள்)
   3) எமதுவாழ்வில் தவிர்ந்துநடக்கவேண்டியசெயல்கள் 5 தருக. (5 புள்ளிகள்)

5. 1) துஆ எனும் சொல்லின் கருத்துயாது? (2 புள்ளிகள்)
   2) பாவங்கள் எத்தனைவகைப்படும்? அவைஎவை? (3 புள்ளிகள்)
   3) பிரயாணத்தின் போதுகடைபிடிக்கவேண்டியஒழுங்குகள் 5 தருக. (5 புள்ளிகள்)

6. 1) அல்குர்ஆனுக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் 2 தருக. (2 புள்ளிகள்)
   2) சூறாஅல்மாஊன் தரும் படிப்பினைகளில் 03ஐ குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   3) அல்குர்ஆனின் சிறப்புக்கள் 5 தருக. (5 புள்ளிகள்)

7. 1) வஹியின் வகைகளைகுறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   2) ஹதீஸுல் குத்ஸிக்கும் அல்குர்ஆனுக்கும் இடையிலான வேறுபாடுகள் 03 தருக. (3 புள்ளிகள்)
   3) ஹதீஸின் இரு பிரதான வகைகளையும் குறிப்பிட்டு, அவற்றை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)